# Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 113/2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 09.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்., அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவநீதன் | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | பிச்சைமுத்து | கிராமம் | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

பி.வா.சா:1

முதல் விசாரணை:–

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி கோவிலின் பரம்பரை அறங்காவலர்களில் ஒருவர். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும்.

குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்):–

1ம் வாதியின் அப்பா பெயர் மாணிக்க சுந்தரமா என்றால் ஆமாம். இந்த வழக்கில் கோபிசெட்டிபாளையம் தாசில்தார் முன்னிலையில் ஆஜாராகி 23.06.1967 அன்று எஸ்.ஆர்.நம்பர் 4/67ன் படி தாவா சொத்து அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோவில் பெயரில் பட்டா வழங்கிய விவரம்எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பட்டா வழங்கிய பின்னிட்டு சொத்து குறித்து தங்களுடைய பெயரில் வேண்டும் என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. செட்டில்மென்ட் தாசில்தார் உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு எதுவும் உடனடியாக செய்யவில்லை என்றால் சரிதான். அறங்காவலர், பரம்பரை அறங்காவலர்கள் என்பவர் கோவிலின் நலனை பேணிக்காப்பவர்கள் என்றால் சரிதான். தனிநபர் சொத்து என்றால் அது மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் மற்றும் இரயத்துவாரி சட்டத்தின்படி நிலவரி திட்ட



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.09 18:23:59 +0200

## Copy of Deposition

வட்டாட்சியர் அவர்களால் மனு செய்து அதன் மூலமாக உரிமை கோரலாம் என்றால் சரிதான். அது போல இந்த வழக்கில் தனிப்பட்ட நபர் பெயரில் பட்டா எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். இந்த சொத்தை பொறுத்து ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.145/2006 என்ற வழக்கு தாக்கல் செய்தும் CMA No. 2/2012 என்ற எண்ணும் வாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதிகள் திருக்கோவிலை தரப்பினதராக சேர்க்காமல் அ.வ.எண்.307/1971 மற்றும் அ.வ.எண்.20/1997 வழக்குகளில் மேல் முறையீட்டு வழக்கு எண்.563/2003லும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.307/1971 தாக்கல் செய்த வழக்கில் சமாதான உடன்படிக்கை அடிப்படையில் பெற்ற தீர்ப்பு கோவில் சொத்து என்ற உண்மையை மறைத்து பெறப்பட்டது என்றால் சரிதான். 12.07.1916 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரமும் 01.07.1950ல் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரமும் கோவில் இடம் என்று மறைத்து செய்யப்பட்டுள்ளதால் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கோவில் இடத்தை வாதிகள் ஒருபோதும் தனி சுவாதீனம் இருந்ததில்லை என்றாலும், அறங்காவலர்கள் கோவிலை பாதுகாக்கும் கடமையுள்ளவர்கள் என்றால் சரிதான். இந்த சொத்துக்களை பொறுத்தும் எந்த விதத்திலும் வாதிகளுக்கு நீடனுபவம் மற்றும் அனுபவ பாத்தியம் எதுவும் கோரி பரிகாரம் கோர முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்த வரையில் இந்த சொத்து கோவில் சொத்து என்பதால் வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.09 18:24:05 +0200<br>Subordinate Judge, |

## Copy of Deposition

Kodumudi